சுருக்கம்

பழங்குடியினர் நலம் – பழங்குடியினர் துணைத் திட்டம் 2015–2016 – பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளுக்கு குடிநீர் வசதி அளித்தல் – ரூ.32 இலட்சம் ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ப.மே1(2)) துறை

அரசாணை (ப) எண்.51 நாள் 29.02.2016

மன்மத வருடம் மாசி 17
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்கப்பட்டது

பழங்குடியினர் நல இயக்குனரின் கடிதம் எண். ந.க.பமே/அ2/ 172/2015, நாள் 22.01.2016.

*************

ஆணை :-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களின் கடிதத்தில் 2015–2016–ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் துணைத் திட்டத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பழங்குடியினர் பகுதிகளில் குடிநீர் வசதி செய்து தரும் திட்டத்திற்கு பணிகளை செயல்படுத்திட வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் பழங்குடியினர் துணைத்திட்டத்தில் குடிநீர் வசதி செய்து தருவதற்காக 2225–02–796–JH-1111 என்ற கணக்குத்தலைப்பின் கீழ் ரூ.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மூலம் 2015–16 ஆம் ஆண்டிற்கு பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி செய்து தருவதற்காக திருப்பூர் மாவட்டத்தில் ரூ.34 இலட்சத்திற்கான முன்மொழிவுகள் வரப்பெற்றுள்ளது என்றும், அதில் குடிநீர் வசதி செய்யும் பணிகள் காப்புவனத்தில் உள்ள பழங்குடியினர் செட்டில்மெண்ட் பகுதிகளில் செய்யப்பட வேண்டியுள்ளதால், இப்பணிகளை வனத்துறை மூலம் மேற்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலே பத்தி ஒன்றில் காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அச்செயற்குறிப்பினை ஏற்று ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2015–2016 ஆம் ஆண்டில் பழங்குடியினர் பகுதிகளில் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மூலம் ரூ.32,00,000/– (ரூபாய் முப்பத்து இரண்டு இலட்சம் மட்டும்) செலவில் குடிநீர் வசதி செய்து தருவதற்காக அனுமதியளித்தும், இதில் ரூ.32,00,000/–ஐ (ரூபாய் முப்பத்து இரண்டு இலட்சம் மட்டும்) முதன்மை தலைமை வனப்பாதுகாவலருக்கு வழங்குவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.:–

" 2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II – மாநிலத்திட்டம் – JH – பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கும் திட்டங்கள் – 11– மானியங்கள் – 01 – தனித்திட்ட மானியம்
(த.தொ.கு. "2225 –02–796– JH - 1111) "

4. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான நிதி 2015–2016 ஆம் ஆண்டு இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை மேற்கொள்ள பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

5. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினைப் பெற்று, பணிகளை மேற்கொள்ள முதன்மை தலைமை வனப் பாதுகாவலருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

6. மேலும், இவ்வாணையின் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை மற்றும் அதன் பணிகளில் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர் வசதி அளித்ததற்கான முன்னேற்ற அறிக்கையினையும், தொகை செலவிடப்பட்டதற்கான பயன்பாட்டு சான்றிதழையும் பழங்குடியினர் நல இயக்குநர் மூலமாக அரசுக்கு அனுப்புமாறு வனத்துறை முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேலே பத்தி 3–இல் ஒப்புதலளிக்கப்பட்ட தொகையில், இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்ட குடியிருப்புப் பகுதிகளில் குழாய்கள் தொடர் அமைத்து பிளாஸ்டிக் நீரேற்று தொட்டிகளின் மூலம் புவிஈர்ப்பு விசையின் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டதை உறுதி செய்யும் வகையில் பணி முடிக்கப்பட்டது குறித்த அறிக்கையினை அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.9946/ஆதி(ம)ப.ந/ 2016–1, நாள் 26.02.2016–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

ப. அண்ணாமலை,
அரசு செயலாளர்.

பெறுநர்
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை–5,
முதன்மை வனப்பாதுகாவலர், பனகல் மாளிகை, சென்னை – 15.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–6/9/18/35
மாவட்டஆட்சித்தலைவர், திருப்பூர்.
நகல்:
அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை.9
நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
திட்டம் (ம) வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
நிதித் (ஆதி (ம) ப.ந /வரவு செலவு) துறை சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கமபா/ஆதிந 5) துறை சென்னை–9
இருப்புக்கோப்பு/உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது// ஏ.தங்கம் 29.2.16

பிரிவு அலுவலர்.

08/03/16

## இணைப்பு

(அரசாணை (ப) எண். 51, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் [பமே1(1)]துறை, நாள் 29.02.2016)

பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கும் திட்டங்கள்

2015–16 ஆம் ஆண்டிற்கு பழங்குடியினர் குடியிருப்புகளில் குடிநீர் வழங்கும் திட்டம்

| வ.எண் | செட்டில்மெண்ட் கிராமத்தின் பெயர் | பயனடையும் பழங்குடியினர் குடும்பங்கள் எண்ணிக்கை | மொத்த தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | தளிஞ்சி | 150 | 7.00 |
| 2. | கோடந்தூர் | 120 | 5.00 |
| 3. | ஆட்டுமலை | 30 | 5.00 |
| 4. | ஈசல்திட்டு | 105 | 5.00 |
| 5. | திருமூர்த்திமலை | 110 | 4.00 |
| 6. | குருமலை | 80 | 3.00 |
| 7. | குளிப்பட்டி | 180 | 3.00 |
| | மொத்தம் | 775 | 32.00 |

ப. அண்ணாமலை,
அரசு செயலாளர்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஏ.ர. தங்கம் 29.2.16
பிரிவு அலுவலர்.

08/03/16